[31st August 1961

SRI R. SRINIVASA IYER: கிருஷ்ணா நதியின் உபரித் தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற வகையில் ஒரு திட்டம் 1953-ம் வருஷத்தில் வகுக்கப்பட்டது. கிருஷ்ணா-கோதாவரித் தண்ணீரைப் பங்கிடும் வகையில் சென்ட்ரல் வாட்டர் பவர் கமிஷன் தனிக் கமிட்டி நியமித்திருக்கிறது. கிருஷ்ணா நதியின் உபரித் தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டுவந்து, அதன் மூலம் செங்கற்பட்டு ஜில்லாவில் 600,000 ஏக்கருக்குப் பாசன வசதியும், சென்னை நகருக்குக் குடி தண்ணீர் வசதியும் ஏற்படக்கூடிய வரையில் தென் மண்டலக் கவுன்சிலிலும், அந்தக் கமிட்டியினிடமும் நம்முடைய அரசாங்கம் 'ரெப்ரஸென்டேஷன்' செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: 1951-ம் வருஷத்திலிருந்தே இதுபற்றி இந்த சர்க்கார் முயற்சி செய்து கொண்டு வந்திருக்கிறது. இந்த ராஜ்யத்தின் பிரதிநிதிகளைச் சேர்த்துக் கமிட்டி அமைக்கப்படவில்லை. மத்திய சர்க்கார் அந்தக் கமிட்டி அமைத்திருக்கிறார்கள். ஆகையால்தான், ஸோனல் கவுன்ஸில் மூலமாக அந்தக் கமிட்டியாரிடம் சொல்லி, நமக்கு வேண்டியதை நாம் சாதித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM: ஸோனல் கவுன்ஸிலில் இதுபற்றி முறையிடுவது ஒருபுறமிருக்க, ஆந்திர ராஜ்ய சர்க்காரிடத்தில் இது சம்பந்தமாக ஏதாவது நேரடியாகப் பேசப்பட்டதா?

THE HON. SRI P. KAKKAN: ஆந்திர ராஜ்ய முதல் மந்திரியுடன் ஸோனல் கவுன்சிலில் ஏற்கெனவே பேசப்பட்டது. அவர்கள் பரிசீலனை செய்து பின்னால் முடிவைத் தெரிவிப்பதாகச் சொன்னார்கள். அவர்களுடைய முடிவைத் தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி ஸோனல் கவுன்சில் பின்னால்தான் முடிவு செய்யும்.

SRI K. VINAYAKAM: மத்திய சர்க்கார் அமைத்திருக்கும் கமிஷனுக்கும், ஸோனல் கவுன்சிலுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல் இருக்கிறது. இரண்டு நதிகளின் தண்ணீர்ப் பங்கீடு பற்றி நிர்ணயிப்பதற்காக தனியாக அந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதால், நம்முடைய தேவையை நாம் ஸோனல் கவுன்சில் மூலமாகத் தெரிவிப்பதைவிட, நேரடியாக, 'as an entity by itself' என்ற வகையில் அந்தக் குழுவுக்கு நம்முடைய கோரிக்கையைத் தெரிவிக்கலாம். நம் ராஜ்யத்தின் விவசாயத் தேவைக்குத் தண்ணீர் தர ஒரு வேளை அவர்கள் மறுத்தாலுங்கூட, சென்னை நகர மக்களின் குடி தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்கவாவது அவர்கள் தர முடியும் அல்லவா? இதற்கு 2,000 க்யூஸெக்ஸ் கிடைத்தால் போதும் என்று இன்ஜினியர்கள் சொல்கிறார்கள். சமுத்திரத்தில் வீணாகும் தண்ணீரைவிட நமக்குத் தேவைப்படும் தண்ணீர் மிகக் குறைவு. ஆகவே, கமிஷன் நியாயமாகப் பரிசீலித்தால் நமக்கு இதைத் தர அவர்கள் ஒத்துக் கொள்வார்கள். நம்முடைய அரசாங்கம் ஸோனல் கவுன்சில் மூலமாக அணுகுவதைவிட, நேரடியாக . . .

THE HON. SRI C. SUBRAMANIAM: May I make a submission, Sir, that the Government are aware of their responsibility with regard to getting water as much as possible from all the available sources and these are delicate matters which have got to be negotiated with the various other State Governments and it cannot be answered on the floor of the House even by way of questions or even by way of debate. It will be left to the good sense and capacity of the Government to deal with these matters.

Teaching of English

* 1555 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பிரிட்டிஷ் கவுன்சில் மூலமாக இங்கிலாந்திலிருந்து புரபஸர்களை வரவழைத்து நமது ராஜ்யத்தில் உபாத்தியாயர்களுக்கு எப்படி ஆங்கிலம் போதிக்க வேண்டுமென்று கற்றுக்கொடுக்க எத்தனை சென்டர்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன ?

(இ) மேலும் எத்தனை செண்டர்கள் ஆரம்பிக்க உத்தேசம் ?

(உ) இதற்கான செலவுக்காக எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது ?

(எ) மத்திய, ராஜ்ய சர்க்கார்களின் உதவி, வெளிநாட்டு உதவி உண்டா?

(ஐ) எப்போதிலிருந்து இதுபோல் ஆரம்பிக்கப்பட்டது?

(ஒ) என்ன நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது? விவரமாக மேஜை மேல் வைக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Four Centres—Pallavaram, Coimbatore, Tiruchirappalli and Virudhunagar.

(இ) One in Tirunelveli District.

(உ) About Rs. 43 lakhs.

(எ) No, Sir.

(ஐ) September 1959.

(ஒ) To improve the general standard of English teaching in schools in the State and in particular to train teachers in V Standard of Elementary Schools in the most up-to-date methods of teaching English.

SRI V. K. KOTHANDARAMAN: பல ஆண்டு காலமாக செகண்டரி கிரேட் உபாத்தியாயர்கள் ஆங்கிலம் எப்படி போதிக்க வேண்டுமென்பதற்கு நீண்ட பயிற்சி பெற்று வந்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு இப்போது பயிற்சி அளிக்கக்கூடிய திறமை இல்லையென்பது நமது சர்க்காரின் நோக்கமா? அல்லது பிரிட்டிஷ் கவுன்சில் மூலமாக அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவேதான் இப்படி போதிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களா? 9-00 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : பிரிட்டிஷ் கவுன்சிலை நாம் கேட்டுக் கொண்டோம். அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். மறு பயிற்சிக்கு உதவ முன்வந்திருக்கிறார்கள். நாம் முன்னே கொடுத்திருக்கிற பயிற்சியில் ஆங்கிலம் போதாது. அந்த முறை சரியானது அல்ல என்பது நமது கருத்து. இப்போது ஆராய்ந்து அறிந்திருக்கிற முறைகளில் போதிக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்பது கருத்து.

SRI K. R. NALLASIVAM : பிரிட்டிஷ் கவுன்சில் மூலமாக வருகின்ற பேராசிரியர்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கமோ, பிரிட்டிஷ் கவுன்சிலோ சம்பளம் கொடுக்கிறதா? அல்லது நாம் செலவழித்துக் கொள்கிறோமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில ஆசிரியர்களுக்கு அவர்கள் கொடுத்து விடுகிறார்கள். இங்கே ஆகக்கூடிய செலவை நாம் ஒத்துக்கொள்கிறோம். ஒரு பிரிட்டிஷ் பேராசிரியருக்கு நாமே கொடுக்கிறோம்.

SRI V. K. KRISHNAMOORTHI : தற்போது ஆங்கிலத்தை ஐந்தாவது வகுப்பில் இருந்து ஆரம்பித்திருக்கிறார்கள். ஆல்பபெட்டில் இருந்து ஆரம்பித்து ஒரு லெசன் அளவுக்கு முதலிலேயே சொல்லிக் கொடுக்க வேண்டியிருப்பதால் முதலில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தப் பயிற்சி ஆசிரியர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது.

SRI M. KALYANASUNDARAM : இங்கிலாந்திலிருந்து எத்தனை பேராசிரியர்கள் வரவழைக்கப்பட்டார்கள்? அவர்கள் மூலம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறதா? ஆசிரியர்களுக்குப் போதிக்கிற ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆங்கிலப் பேராசிரியர்கள் மூன்று பேர் இருக்கிறார்கள். இவர்கள் நேரிடையாக ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கிற ஆசிரியர்களுக்குப் போதிக்கிறார்கள்.

[31st August 1961

Sri K. Vinayakam : There could be no two opinions on the efficacy of the system that is adopted by the Government. I am aware of it. However, would the Government issue instructions to the Director of Public Instruction and the District Educational Officers concerned to select such of those teachers who actually handle English classes in the elementary schools instead of selecting at random whomsoever they like and who do not actually and exactly handle or teach the classes in English?

The Hon. Sri C. Subramaniam : There are no such teachers as teachers of English. As far as elementary teachers are concerned they have to deal with some two or three classes and some times two or three subjects also. All the Secondary Grade teachers teach English. Our programme is to give re-training to all Secondary Grade teachers numbering about 26,000 to 27,000. Secondly, in the training schools also the methods of teaching which are adopted will have to be changed. That process is also taking place. Once we give re-training to the existing teachers, the new incumbants getting training in future will be taught in the new method.

Sri A. A. Rasheed : Sir, in view of the big rush to these centres, will the Government consider to open some more such centres?

The Hon. Sri C. Subramaniam : The question is whether sufficient number of trained personnel of the standard required to teach the Secondary Grade teachers was available. We have to get teachers with great experience. Our view is that this training programme should be over within a period of two years. We are sorry we are lagging behind by a year. Perhaps, it will take one more year to complete the programme.

Mechanical filters

* 1556 *Q.*—Sri A. A. Rasheed : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Corporation of Madras has applied for a grant and loan to install rapid mechanical filters; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri M. A. Manickavelu : (*a*) and (*b*) The Commissioner, Corporation of Madras, has submitted an application for a loan and it has been referred to the Chief Engineer, Public Works Department (General), for his remarks.

An application for a grant has not yet been received.

Sri A. A. Rasheed : Sir, is the Hon. Minister aware that only non-vegetarian water is supplied by the Corporation because the filtered water is being mixed with the non-filtered water?